TC-19

**001/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

குறிப்பு :

**1.** **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**2.** **வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

**3.** **கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியை – தமிழாக்கம் செய்க. (10)

Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls from some regular habits. They learn to behave in an orderly way. They are corrected whenever they go wrong.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக (2 × 15 = 30)

2. மகளிர் முன்னேற்றம்.

3. தமிழ் மொழியின் பெருமை

கீழ்க்கண்ட வினாவிற்கு ஏற்ற விண்ணப்பம் வரைக. (10)

4. ஆண்டு ஊதிய உயர்வு வேண்டி உரிய அலுவலருக்கு விண்ணப்பம் எழுதுக.

**[Turn over**

## பகுதி — II

5. கொடுக்கப்பட்டுள்ள உடைநடைப் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (5 × 1 = 5)

இசுரேல் எகிப்து நாடுகளுக்கிடையே கடும் போர் நடந்த நேரம், அமெரிக்க இதழ் இபான் ஆசிரியர் இசுரேலுக்குச் சென்றார். விடியற்காலை மணி இரண்டு, கட்டடங்களின் மேல் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. தாம் தங்கியிருந்த இல்லத்தில் , அந்நிலையிலும் ஓர் இளம்பெண் ஒரு நூலை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார். அதனைக் கண்டு வியப்புற்ற இபான் ஆசிரியர், அந்நூலை வாங்கிப் பார்த்தார். அது காந்தியடிகளின் சத்தியசோதனை. “இந்த நேரத்தில் குண்டுகளுக்கிடையே இந்நூலை ஏன் படிக்கின்றாய்?” என்ற போது, அந்தப் பெண்ணின் மறுமொழி “இதில் தான் உலகம் உய்ய உற்றவழி இருக்கின்றது” என்றார். உலகில் இன்று காந்தியடிகள் இல்லை. ஆனால் அவர்விட்டுச் சென்ற காந்தியக் கொள்கைகள் இன்றும் உலகை வழிநடத்திச் செல்கின்றன

வினாக்கள் :

(அ) அமெரிக்க இதழின் பெயர் என்ன?

(ஆ) இளம்பெண் படித்த நூலின் பெயர் என்ன?

(இ) சத்திய சோதனை நூலை எழுதியவர் யார்?

(ஈ) சத்திய சோதனையை அப்பெண் படித்ததன் காரணம் என்ன?

(உ) இன்று உலகை வழி நடத்திச் செல்வன எவை?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப உரையாடலை நிறைவு செய்க. (5)

மருத்துவமனையில்

நோயாளி : மருத்துவரே! உள்ளே வரலாமா?

மருத்துவர் : ______________________.

நோயாளி : இரண்டு நாட்களாக தொடர்ந்து காய்ச்சலாக உள்ளது.

மருத்துவர் : ______________________.

நோயாளி : இல்லை மருத்துவரே

மருத்துவர் : உடனே இரத்தப் பரிசோதனை செய்து வாருங்கள்

நோயாளி : ______________________.

மருத்துவர் : டெங்கு காய்ச்சல் உள்ளதா? என அறிந்து கொள்ள

நோயாளி : ______________________.

மருத்துவர் : கொசுக்கள் மூலம் பரவுகிறது

நோயாளி : அனைத்து வயதினரையும் இந்நோய் தாக்குமா?

மருத்துவர் : ______________________.

## பகுதி — III

மொழிப் பயிற்சி (40 × 1 = 40)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

7. அளபெடைகள் எத்தனை வகைப்படும்?

8. 187 எண்ணை எழுத்தால் எழுதுக.

9. ‘அல்லும் பகலும்’ சொற்றொடரில் அமைத்து எழுதுக.

10. மாதத்தின் பெயரைத் தமிழில் எழுதுக.

11. வாரத்தில் முதல் நாள் (கிழமை) எது?

12. பொங்கல் விழா கொண்டாடப்படும் தமிழ் மாதத்தின் பெயர் என்ன?

13. விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.
து——, பு ——, யூ——, லு——மு

14. அகர வரிசைப் படுத்தி எழுதுக.
மொட்டு, மோனை, மடங்கல். முடங்கல்

15. குறில் எழுத்துக்களைக் கண்டறிந்து எடுத்தெழுதுக.
கண்ணன் பாடம் படித்தான்

உரிய நிறுத்தற்குறி இடுக :

16. தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்பாலை என ஐவகையாகப் பிரித்தனர்.
17. ஐயோ கிளி கல்லால் அடிப்பட்டதே

பிழையைத் திருத்தி எழுதுக :

18. கண்ணகி வந்தான்
19. மாடு வந்தாள்

விடைக்கேற்ற வினா எழுதுக :

20. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்
21. நன்னூல் கிடைக்கும்.

வினைச்சொற்களை எடுத்து எழுதுக :

22. மயில் ஆடியது
23. கலா பாடினாள்

குறில், நெடில் பிழையைக் கண்டறிந்து எழுதுக.

24. வழைப்பாழம் சாப்பீட்டன்

25. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் உருவாக்குக.
கலம்

26. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.
மறங்கள் மன் அறிப்பைத் தடுக்கும்
கீழ்க்கண்ட வினாவிற்கு விடை எழுதுக.

27. தமிழ்நாட்டின் தேசிய விலங்கு எது?

28. இரு பொருள் தருக
அஞ்சுகம்

29. பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றுக
அவரவர் வுட்டுளே சாப்பாடு

30. நிகழ்காலச் சொல்லை எடுத்தெழுதுக.
நடிப்பான், நடித்தான், நடிக்கின்றான்

31. பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக :
கஜானா

நூலையும் நூலாசிரியர் பெயரையும் பொருத்துக.

32. குடும்ப விளக்கு – கண்ணதாசன்
33. ஏலாதி – கவிமணி
34. ஆசியஜோதி – கணி மேதையார்
35. இயேசு காவியம் – பாரதிதாசன்

36. பால் வகையை எழுதுக :
பறவைகள்.

37. திணை வகையை எழுதுக :
சிங்கம்

38. Pharmacy —தமிழாக்கம் செய்க.

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

39. பூக்கள் —————— வீசின (மனம், மணம்)

40. பிறர்க்கு உதவி செய்ய —————— வேண்டும் (மனம், மணம்).

41. பாதம் – இடை எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்று உருவாக்குக.

42. B.Lit., பட்டப்படிப்பைத் தமிழில் விரித்து எழுதுக.

43. பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.
மல்லிகை, முல்லை, தாமரை, சிவப்பு

44. பெயர்ச் சொல்லை எடுத்தெழுதுக.
(அ) விலங்குகள்
(ஆ) ஓடினான்
(இ) சிரித்தான்

45. பொருந்தமான சொல்லை எழுதுக.
மரத்தில் பழங்கள் —————— (பழுத்தது, பழுத்தன)

46. இரத்தல், இறத்தல் – என்பதன் பொருளை எழுதுக.

---